மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு பரிந்துரை அனுப்பியிருந்தால் கண்டிப்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

***12394—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான கடையநல்லூரிலே நீதிமன்றம் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தாலுகா அறிவிக்கப்பட்டு, 5 வருடங்கள் ஆகப் போகின்றன. ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு நீதிமன்றம் அமைக்கலாம் என்ற ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதாக நான் அறிகின்றேன். கடையநல்லூர் தாலுகாவை பொறுத்தவரை, 2 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள்,*

2019 ஜுலை 5]

25 ஊராட்சிகள். மக்கள்தொகை 3 இலட்சத்து 14 ஆயிரத்து 318 பேர் என, இவ்வளவு இருந்தும்கூட அங்கே முதலில், குறைந்தபட்சம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தையாவது அறிவிக்க வேண்டும். தொடர்ந்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தையும் அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதை நான் இங்கே வலியுறுத்தி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடையநல்லூர் தனி தாலுகாவாக மறைந்த முதல்வர் அவர்களுடைய காலத்தில் அறிவிக்கப்பட்டு, அங்கே தற்காலிகக் கட்டடத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தத் தாலுகா அலுவலகத்திற்கான எந்த அடிப்படை வசதிகளும் இதுவரை செய்யப்படவில்லை என்பதையும் உங்களுக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடையநல்லூர் தாலுகா மக்கள் நீதி வேண்டி இப்போது தென்காசி, சிவகிரி, செங்கோட்டை நீதிமன்றங்களுக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, தயவுகூர்ந்து துவக்கமாக குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை கடையநல்லூரிலே துவங்க வேண்டுமென உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டப்படுமா என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, அங்கு நீதிமன்றம் இருக்கின்றது. இருக்கின்ற நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த வளாகம் கட்டப்படுமா என்பதுதான் கேள்வி. ஆனால், இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றங்கள் திறக்கப்படுமா என்று புதிய கேள்வி ஒன்றைக் கேட்கிறார். அடிப்படையிலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி தவறான கேள்வியாகும். கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் நீதிமன்றமே இயங்கவில்லை. ஆக, அவர் கேட்ட கேள்வியே தவறு. இல்லாத நீதிமன்றத்திற்கு எப்படி கட்டடம் கட்ட முடியும்? இப்போது அவர் கேள்வியையே மாற்றிவிட்டார். (குறுக்கீடு) இப்போது அவர் கேள்வியையே மாற்றிவிட்டார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடையநல்லூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டப்படுமா என்ற கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார். அதை நான் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான்,

மேம்போக்காக செயற்குறிப்பில் இல்லையென்று சொன்னேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நீதிமன்றம் வேண்டும் என்கிறார். தாலுகாவாக அறிவிக்கப்பட்டு 5 ஆண்டுக் காலமாக இருக்கின்றது. அரசு, நீதிமன்றம் இல்லாத தாலுகாவிற்கு நீதிமன்றம் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய தாலுகாவிற்கும் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நீதிமன்றம் இல்லாத தாலுகாவில் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபோதே தமிழகத்திலே 51 தாலுகாக்களுக்கு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று சொல்லி, அந்த 51 தாலுகாக்களும் தேர்வு செய்யப்பட்டு, 3 பகுதிகளாக அதாவது, முதலாம் ஆண்டு 17, இரண்டாம் ஆண்டு 17, மூன்றாம் ஆண்டு 17 என இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டு, முதலாம் ஆண்டுக்கான 17 நீதிமன்றங்களை அறிவித்தோம். அதற்கான அரசாணையையும் வெளியிட்டுவிட்டோம். நிதியும் ஒதுக்கப்பட்டுவிட்டது. இதில் என்ன பிரச்சினையென்றால், அந்த நீதிமன்றங்களில் நியமிப்பதற்கு நீதிபதிகள் இல்லை. ஆனால், இப்போது புதிதாக 220 நீதிபதிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் பயிற்சிக்குச் சென்றிருக்கின்றார்கள். விரைவிலே, அந்த நீதிபதிகள் பணியமர்த்தப்பட்டவுடனே அறிவிக்கப்பட்ட அந்தத் தாலுகா நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமிக்கப்பட்டு, அவை செயல்படும். அதன் தொடர்ச்சியாக இரண்டாவது கட்டமாக, மூன்றாவது கட்டமாக அறிவிக்கப்பட்ட அந்த நீதிமன்றங்களும் தோற்றுவிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான, புதிய தாலுகா நீதிமன்றம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எனது தொகுதிக்குட்பட்ட செங்கோட்டை, பழமையான ஊர். திருவாங்கூர் மகாராஜா காலத்திலே கட்டப்பட்ட கட்டடங்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. அங்கேயிருக்கக்கூடிய District

2019 ஜூலை 5]

Munsif cum Judicial Magistrate Court–ல் Civil *மற்றும்* Criminal *தொடர்பான அனைத்து வழக்குகளையும் ஒரே கட்டடத்தில் விசாரிக்கக்கூடிய வகையிலே இருக்கின்றது. அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்திருக்கின்றது. எனவே, செங்கோட்டையிலே இருக்கக்கூடிய அந்த வளாகத்திலே* Criminal *வழக்குகளையும்,* Civil *வழக்குகளையும் தினந்தோறும் விசாரிக்கக்கூடிய வகையிலே, இரண்டிற்கும் தனியாக கட்டடங்களை, புதுப்பொலிவோடு அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசின் கொள்கை. அதனடிப்படையிலே, தமிழகத்தில் இருக்கின்ற நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக கோரிக்கை வைக்கின்ற அனைத்து நீதிமன்றங்களுக்கும், உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை பெற்றிருந்த அனைத்து நீதிமன்றங்களுக்கும் உடனுக்குடன் அனுமதி வழங்கி, நிதி ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அரசு, அம்மா அவர்களுடைய அரசு. கடந்த 2018–2019 ஆம் ஆண்டில் மட்டும் புதிய நீதிமன்றங்களைக் கட்டுவதற்கும், அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் 236 கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற திருநெல்வேலி மாவட்டத்திலே 52 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதில் 47 நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களிலும், அரசு கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மீதமிருக்கின்ற 5 நீதிமன்றங்களிலே, நாங்குநேரியிலும், அம்பாசமுத்திரத்திலும், புதிய நீதிமன்றங்கள் கட்டப்பட்டுவிட்டன. தற்போது அவை திறக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கின்றார்கள். District Munsif cum Judicial Magistrate Court *ஆக இருக்கிறது. இரண்டு கட்டடங்கள் வேண்டுமென்று சொல்கிறார். இரண்டு கட்டடங்கள் வேண்டுமென்றால், அதை முதலில்* Munsif Court *என்றும்* Magistrate Court *என்றும் பிரிக்க*

வேண்டும். அதைப் பிரிக்க வேண்டுமென்றாலும் சரி, புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்றாலும் சரி, உங்களுடைய மாவட்ட நீதிபதியின் மூலமாக பரிந்துரை பெற்று, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். உயர் நீதிமன்றத்திலிருந்து அந்தப் பரிந்துரையைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கண்டிப்பாக இந்த அரசு நிறைவேற்றித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கடையநல்லூரில் நீதிமன்றம் அமைப்பது பற்றியது. ஆனால், கடையநல்லூரில் ஒரு தாலுகா அலுவலகம் கட்டுவதற்காக இடத்தைத் தேர்வு செய்து, அது சரியில்லை என்று அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சொல்லியபோது தாங்களும் உடனிருந்தீர்கள். அதுபற்றி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் சொன்னார்கள். அந்த இடத்தை ஊருக்குள் மாற்றிக் கட்டுகிற பணிகள் எந்தளவிற்கு இருக்கின்றன என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு இந்த அவையிலே அவர் விவாதத்தை எடுத்து வைத்ததன் காரணமாக, தேர்வு செய்யப்பட்ட அந்த இடத்திலே பூமி பூஜை போடப்பட்டு, கட்டடப் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2, 3 நீர்நிலைப் புறம்போக்கு இடங்களை அடையாளம் காட்டியிருக்கின்றார்கள். மாவட்ட நிருவாகத்தால் இன்னும் அந்த இடங்கள் தேர்வு செய்து தரப்படவில்லை. ஆகவே, தற்காலிக கட்டடத்திலே அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. புதிய கட்டடம் கட்டுவதற்கு அவரும் ஒத்துழைப்புத் தந்தால், நாமும் கட்டடம் கட்டத் தயாராக இருக்கிறோம். இடம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

2019 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் கேட்டார், அதற்காக வாய்ப்பு கொடுத்தேன். திரும்பவும் நீங்கள் கேள்வி கேட்டால், நேரமில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பொள்ளாச்சி மக்களின் பயன்பாட்டிற்காக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படும் என்று அறிவித்து, அதற்கான நிதியையும் ஒதுக்கிக் கொடுத்தார்கள். இப்போது நில எடுப்புப் பணிகள் நல்லபடியாக முடிவடைந்து, 3.20 ஏக்கர் நிலம் நீதிமன்ற கட்டடத்திற்காக ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய விருப்பப்படி, இந்த ஆண்டே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல, சட்டமன்றத்திலே அறிவிக்க வேண்டுமென்பதில்லை. நீதிமன்றக் கட்டடங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதைப் பொறுத்தவரை, எப்போதெல்லாம் நீதிமன்றத்திலேயிருந்து பரிந்துரை பெறப்படுகிறதோ, அப்போதெல்லாம் உடனுக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதலளித்து, அம்மா அவர்களுடைய அரசு, அதற்கான நிதியை ஒதுக்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல இடம் ஒதுக்கப்பட்டுவிட்டது. அந்த இடத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக்கொண்டு அரசுக்கு பரிந்துரை செய்தால், அதை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி இந்த ஆண்டே அதை எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தாலுகா பிரிக்கப்பட்டு, தண்டராம்பட்டு தாலுகா பிரிக்கப்பட்டு 11 ஆண்டுகாலம் ஆகிறது. அங்கு இதுவரை Magistrate Court அதாவது நடுவர் நீதிமன்றம் துவக்கப்படவில்லை. மோத்தக்கல்லிலிருந்து செங்கத்திற்கு போக வேண்டுமென்று சொன்னால், சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. புதிய தண்டராம்பட்டு தாலுகாவிலே, தானிப்பாடி காவல் நிலையம், வானாபுரம் காவல் நிலையம், சாத்தனூர் காவல் நிலையம், தண்டராம்பட்டு காவல் நிலையம் என்று 4 காவல் நிலையங்கள் அமைந்திருக்கின்றன. அதுவும் குறிப்பாக, இது மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. எனவே, அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, முன்னுரிமை அளித்து, அங்கே புதிதாக Magistrate Court அதாவது நடுவர் நீதிமன்றம் துவக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக constitution of Court–நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டுமென்றால், கண்டிப்பாக உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை அவசியம். ஏனென்றால், எவ்வளவு வழக்குகள் இருக்கின்றன, நீங்கள் கேட்கின்ற பகுதியிலிருந்து எவ்வளவு வழக்குகள் வருகின்றன என்பதைக் கணக்கிட்டு, அந்தக் கணக்குகளின் அடிப்படையில், இவ்வளவு வழக்குகளுக்கு ஒரு நீதிமன்றம் இருக்க வேண்டும் என்று அவர்கள் விதிகளை வகுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற தண்டராம்பட்டு மிகவும் பின்தங்கிய பகுதி என்பது எனக்கும் தெரியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து உயர் நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அந்தப் பகுதியிலே தாலுகா நீதிமன்றம் வேண்டும் என்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த சமயத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்றைக்கு அந்த 51 தாலுகா நீதிமன்றங்களை அறிவிக்கின்றபோது, அவற்றை

2019 ஜூலை 5]

சிறு வழக்குகளை விசாரிக்கின்ற நீதிமன்றங்களாகத்தான் நாங்கள் அறிவித்தோம். ஆனால், ஒரு நல்ல செய்தி, அந்த நீதிமன்றங்கள் Munsif–cum–Magistrate Court *ஆக இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. முழுமையான நீதிமன்றங்களாக இன்றைக்கு அவை தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த 51 நீதிமன்றங்களும் முழுமையான நீதிமன்றங்களாக இன்றைக்கு செயல்படவிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று அதைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***37520—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் தொகுதி, கொழுமங்கொண்டான், நரிக்கல்பட்டி, சந்தயிசெட்டி வலசு மற்றும் அமரப்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒட்டன்சத்திரம் தொகுதி, கொழுமங்கொண்டான், நரிக்கல்பட்டி, சந்தன்செட்டி வலசு மற்றும் அமரப்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என ஒட்டன்சத்திரம் தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளார்கள். இந்தச் சங்கங்கள் புதிதாக அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கையோ, விண்ணப்பமோ அரசுக்கு இதுநாள்வரை வரப்பெறவில்லை. அங்கே சங்கங்கள் அமைக்க வேண்டும் என்று விரும்புகிற உறுப்பினர்களால் முதன்மை அமைப்பாளர்மூலம் கோரிக்கை